**கவனிக்க.-** 2024.06.20 ஆந் திகதிய 2390 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2391 - 2024 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2024.06.28

*2391 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 646 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 05 ஆந்திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண சபை பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) தரத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு மாவட்டத்தை அடிப்படையாக கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை - 2024

வடமேல் மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்தில் வெற்றிடங்களுக்கு மாவட்ட மட்டத்தில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் ஆசிரியர்களின் சேவை யாப்பு மற்றும் இந்த அறிவித்தலின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பட்டதாரிகளிடம் இருந்து நிகழ்நிலையில் (Online) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இந்த ஆட்சேர்ப்பு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடக பாடங்களுக்காக செய்யப்படுவதுடன், ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆரம்ப பிரிவை தவிர ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரி ஒருவருக்கு அவர் தெரிவு செய்த பாடங்களில் நியமனம் ஒன்றினை பெறாத சந்தர்ப்பத்தில் அவர் ஆரம்ப பிரிவிற்கான தகைமைகளை கொண்டவராக இருந்தால் அவரின் விருப்பத்தின் படி ஆரம்ப பிரிவுக்கு நியமிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

02. I. குருநாகல் மாவட்டத்தின் குடியிருப்பாளர்கள் குருநாகல் மாவட்ட பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தின் குடியிருப்பாளர்கள் புத்தளம் மாவட்ட பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

II. ஆட்சேர்ப்பின் போது அந்தந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. ஒரு மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களை நிறைவு செய்வதற்கு தகுதியானவர்கள் போதுமானதாக இல்லாத போது மட்டும் மற்ற மாவட்டத்தில் அதே பாடத்திற்கு தகுதி பெற்றவர்கள் இருந்தால், அவர்களை கொண்டு அந்த வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படும்.

03. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஊடகங்களில் வெற்றிடங்கள் காணப்படும் பாடங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. வெற்றிடங்களின் எண்ணிக்கை வடமேல் மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

04. சம்பள அளவுத் திட்டம்:

இப்பதவி 05.01.2022 ஆந் திகதி கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 (IV) இன் இலக்கம் ஜீ.ஈ.1-2016-ஏ சம்பளத் திட்டத்தின் ரூ. 31,490 - 6X445 - 7X525 - 2X600 - ரூ. 39,035 என்ற மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்துடையதாகும் என்பதுடன் இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 14 ஆம் கட்டமான ரூ 37,835 உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

05. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:

5.1 கல்வித் தகைமைகள்:

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட, கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் விசேடமாக்கப்பட்ட துறைகள் சார்ந்த, அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குரிய பட்டம் ஒன்றை அல்லது (பொ.நி.சு. 46/90 இன் படி) இலங்கை தொழிநுட்பவியல் கல்லூரியினால் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமாவை (HNDA) பெற்றிருத்தல்.

மற்றும்

II. கல்விப்பொதுத்தராதரசாதாரணதரப்பரீட்சையில்சிங்களமொழிஅல்லதுதமிழ்மொழியுடன்கணிதப்பாடமும் சித்தியடைந்திருத்தல்.

**மிக முக்கியம்**: Online விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதிக்கு தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தமது பட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கக்கூடிய பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தாங்கள் பட்டப்படிப்பில் படித்த பிரதான பாடம்/பாடங்களில் கவனம் செலுத்தி பாட வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். நான்கு வருட பட்டம் பெற்றிருந்தால் முதல் 03 வருடங்கள் முழுவதும் விண்ணப்பித்த பாடத்தை பிரதான பாடமாக படித்திருந்தால் போதுமானது.
- ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் ஒரு online விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். எனவே விண்ணப்பிக்கும் முன், தங்கள் மூலம் உள்ளிட்ட தகவல்கள் சரியானதா என்று சரிபார்க்கவும். Online விண்ணப்பத்தின் PDF கோப்பை பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட நகலைப் பெற வேண்டும்.

5.2 உடல் மற்றும் உளத் தகைமை :

சகல விண்ணப்பதாரிகளும், ஆசிரியர் ஒருவராக கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

5.3 வயது:

விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிலும் குறைவாகவும் 40 வயதிலும் அதிகமாகவும் இருத்தலாகாது.

5.4 ஏனைய தகைமைகள்:

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் மற்றும் வடமேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரி சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராகவும், உடலாரோக்கியம் மிக்கவராகவும் காணப்பட வேண்டும்.

III. வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மூலம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு **03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் விண்ணப்பதாரிகளும்** DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் தாங்கள் வசித்து வரும் காலம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

V. விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களின் வாழ்க்கைத் துணை அண்மிய 03 ஆண்டுகளில் வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால், மேற் குறிப்பிட்ட IV இன் படி அவர்களின் விண்ணப்பமும் கருத்தில் கொள்ளப்படும். வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மற்றும் திருமண சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

06. சேவை நிபந்தனைகள் -

I. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இப்பதவி நிரந்தரமானது என்பதுடன் உங்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் கட்டுப்பட வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும்.

IV. வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

V. 2020.10.16 ஆந் திகதிய அ.நி.சு. 18/2020 இன் படி பணியிலமர்ந்து 03 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

VI. நியமனம் பெற்றுக் கொள்வோர் முதல் நியமனம் பெறும் கல்வி வலயத்தினுள் குறைந்த பட்சம் 06 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும் என்பதுடன் குறித்த 06 வருட காலத்தினுள் இடமாற்றங்களுக்காக விண்ணப்பிக்க முடியாது.

VII. தமது முதல் நியமனம் பெறும் பாடசாலை கஷ்டப் பாடசாலை/அதி கஷ்டப் பாடசாலையாக இல்லாதவிடத்து தமது சேவைக்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது குறைந்த பட்சம் 05 வருடங்கள் கஷ்டப் பாடசாலை/ அதி கஷ்டப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றுவதற்கு கடப்பாடுடையவராவார்.

07. ஆட்சேர்ப்பு செய்தல்:

7.1 ஆட்சேர்ப்பு செய்யும் முறை:

வடமேல் மாகாண சபை பொதுச் சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் ஏற்பாடுகள் மற்றும் கௌரவ வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

7.2 எழுத்து மூலப் பரீட்சை: இந்த பரீட்சை இரண்டு வினாத்தாள்களை கொண்டது.

| பாட இல. | பாடம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பொது உளச் சார்பு ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |
| 02. | பொது அறிவு ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத் திட்டம்:

பாட இல. 01-பொது உளச் சார்பு

விண்ணப்தாரியின் திறன்கள், தர்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இவ் வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் குறு வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். (ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள்)

பாட இல. 02 - பொது அறிவு

சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும். ( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

7.3 பரீட்சை விதிமுறை :

I. இப்பரீட்சைக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்கலாம்.

II. சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு (02) வினாப் பத்திரங்களுக்கும் முகங் கொடுக்க வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரியும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி ஊடகத்தில் தோற்ற வேண்டும். அந்த மொழியே அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும்.

IV. ஆங்கில மொழி பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

V. விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

7.4 நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை:

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியின் கீழ், எழுத்து மூல பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் தகுதியின் அடிப்படையில், குறிப்பிட்ட பாடம் ஒவ்வொன்றிலும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கானோர் நேர்முக பரீட்சைக்கும் செயன்முறை பரீட்சைக்கும் ஒரே நேரத்தில் அழைக்கப்படுவார்கள். நேர்முக பரீட்சைக்கு சமூகமளிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் செயன்முறை பரீட்சைக்கு தோற்றுவது கட்டாயமாகும்.

I. நேர்முக பரீட்சையின் போது, விண்ணப்பதாரி அழைக்கப்படும் பாடம்/ பாடங்கள் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரா என்பது பரிசோதிக்கப்படுவதோடு அவர் பட்டம் பெற்ற வகுப்பு சித்தி மற்றும் மேலதிக தகைமைகள் என்பவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(அ) வகுப்புச் சித்திகளுக்காக புள்ளி வழங்கல் பின்வருமாறு அமையும் :
(அதிக பட்சம் 07 புள்ளிகள் )

முதலாம் வகுப்பு - 07 புள்ளிகள்.
இரண்டாம் வகுப்பு (உயர்) - 05 புள்ளிகள்
இரண்டாம் வகுப்பு (கீழ்) - 03 புள்ளிகள்

(ஆ) மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( அதிக பட்சம் 10 புள்ளிகள்)

| தொ. இல. | நியதிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. | தர்ம பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதம் ஒன்றுக்கு அதற்குச் சமனான பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றமையை உறுதி செய்யும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 |
| 02. | விளையாட்டு, அழகியல் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகளில் அரசின் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 |

II. செயன்முறை பரீட்சை ( அதிக பட்சம் 08 புள்ளிகள்):

செயன்முறை பரீட்சையின் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்திருக்கும் ஏதேனும் ஒரு பாடத்திற்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றின் கீழ் 05 நிமிடங்களுக்கு குறையாத நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் கருத்து வெளியீட்டு திறமையும் தொடர்பாடல் திறமையும் பரீட்சிக்கப்படும்.

08. பரீட்சை நிலையங்கள்:

மேற்படி போட்டிப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடைபெறும். பரீட்சை நிலையம் ஒன்றை நடாத்துவதற்கு போதுமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் இல்லாத போது அருகில் உள்ள பரீட்சை நிலையம் ஒன்றிற்கு அனுப்பப்படுவார்கள்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| குருநாகல் | 01 |
| குளியாபிட்டிய | 02 |
| மஹவ | 03 |
| புத்தளம் | 04 |
| சிலாபம் | 05 |

09. தெரிவு செய்யும் முறை:

(அ) வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்தல் நடைபெறும்.

(ஆ) ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தகுதி பெற்றிருந்தால் அவருக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பில் வடமேல் மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு தீர்மானம் எடுக்கும்.

10. பரீட்சை கட்டணம் :

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 1200.00 ஐ வடமேல் மாகாண சபை இலக்கம் 2003-02-13 இன் வருமான தலைப்புக்கு வரவு வைக்கப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் கட்டணங்களைச் செலுத்தி தன்னுடைய பெயரில் பெற்றுக் கொள்ளும் வமே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். வமே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்கள் அல்லது காசுக் கட்டளைகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவ்வாறான பற்றுச் சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும், எந்தக் காரணத்திற்காகவும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும், அந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். (கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பின்னர் பயனளிக்கலாம்).

11. விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்கு:

11.1 (அ) இந்த ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுதல் நிகழ்நிலையில் psc.nw.gov.lk என்ற இணையத் தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். psc.nw.gov.lk என்ற இணையத் தளத்திற்குப்

பிரவேசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை PDF வடிவிலான கோப்பாக பதிவிறக்கம் செய்து அதில் அச்சு பதித்த பிரதி ஒன்றினையும் அனுப்ப வேண்டும்.

(ஆ) விண்ணப்பித்த பாடம்/பாடங்கள்/மாவட்டம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது.

(இ) பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்துக் கொண்ட பிரதியில், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினை அதற்குரிய இடத்தில் ஒட்டி, வடமேல் மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவிற்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்ப வேண்டும். (பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்ததன் நிழற் படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனளிக்கலாம்)

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.08.01

11.2 நிகழ்நிலையில் முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை 2024.08.07 திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

செயலாளர்,
வடமேல் மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பபடிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024” என்பதோடு வதியும் மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**: ஊனமுற்ற விண்ணப்பதாரிகள் தங்கள் குறைப்பாட்டை விண்ணப்பபடிவத்தில் குறிப்பிட்டு அனுப்பவும்.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்:

பதிவிறக்கம் செய்து கொண்ட விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 41,580.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க / மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

13. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:

விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் போது, அனைத்து பாடங்களுக்கும் தம் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சார்த்தியிற்கு உறுதி செய்ய வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

அல்லது

(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு /செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

**குறிப்பு**: பரீட்சை மண்டபத்தில் விண்ணப்பதாரி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

14. விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கபட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்கு, நேர்முகப் பரீட்சைக்கு, செயன்முறைப் பரீட்சைக்குத் தகுதியற்றவர் என அறியப்பட்டால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரி ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பொய்யான தகவல்களை வழங்கி இருக்கிறார் என்றோ அல்லது உண்மையான தகவல்கள் வேண்டும் என்றே மறைத்திருக்கிறார் என்றோ தெரிய வந்தால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

15. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, உரிய தகவல்களோடு பூரணப்படுத்திய நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை முறைப்படி முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு வடமேல் மாகாண சபை பொது சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பபட்ட உடனே வடமேல் மாகாண சபை பொது சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தின் (www.psc.nw.gov.lk) மூலம் அறிவிக்கப்படும். போட்டிப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 நாட்கள் முன்னர் வரை பரீட்சை அனுமதிச் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக வடமேல் மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவின் பரீட்சைகள் பிரிவிற்கு அறிவிக்க வேண்டும்.

**குறிப்பு**: நேர்முகத் பரீட்சைகள் மற்றும் செயன்முறை பரீட்சைகளுக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களின் பட்டியல் வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.psc.nw.gov.lk) மட்டுமே வெளியிடப்படும் என்பதால், விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தை தவறாமல் பார்வையிட வேண்டும்.

16. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் இல்லாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் வடமேல் மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

17. இந்தப் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண பொது சேவை ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

18. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் மொழிப் பிரயோகங்கள் தொடர்பில் இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தரப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

ஈ.எம்.பி. ஏக்கநாயக
செயலாளர்.

வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழு,
2024, யூன் 15.

**வடமேல் மாகாண சபை பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு மாவட்டத்தை அடிப்படையாக கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை - 2024**

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| | **ஆரம்பப் பிரிவு (1 முதல் 5 ஆம் தரம் வரை)** | | | | | | | |
| | | **சிங்கள மொழி ஊடகம்** | | | | | | |
| 01. | ஆரம்பப் பிரிவு | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் சிங்களம் / சிங்கள மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சிங்களப் பாடத்தில் திறமை சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(III) ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த (சா./த.) பரீட்சையில் சிங்களம் பாடத்திற்கு அதி விசேட சித்தி மற்றும் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| | | **தமிழ் மொழி ஊடகம்** | | | | | | |
| | | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் தமிழ் /தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமை சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(III) ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த (சா./த.) பரீட்சையில் தமிழ் பாடத்திற்கு அதி விசேட சித்தி மற்றும் கணித பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல். | | √ | | | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| | இடைநிலைப் பிரிவு (தரம் 6-11 வரை) | | | | | | | |
| 02. | விஞ்ஞானம் | (I) உயிரியல் / இரசாயனவியல் / பௌதீகவியல் பாடத்தை உள்ளடக்கிய விஞ்ஞானமானி / பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த (உ./த.) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(II) ஏதேனும் ஒரு விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | √ | √ | √ | √ | √ |
| 03. | கணிதம் | (I) கணிதப் பாடத்தை உள்ளடக்கிய விஞ்ஞானமானி / பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் இணைந்த கணிதம் / கணித பாடத்தில் சித்தியடைந்திருத்தல்<br>அல்லது<br>(II) ஏதேனும் ஒரு பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் இணைந்த கணிதம் / கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | √ | √ | √ | √ |
| 04. | முதலாம் மொழி (சிங்களம்) மற்றும் இலக்கியம் | மொத்த கற்கைக் காலத்தினுள் சிங்களம் / சிங்கள மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது அல்லது விசேட பட்டம். | √ | | | √ | | |
| 05. | முதலாம் மொழி (தமிழ்) மற்றும் இலக்கியம் | மொத்த கற்கைக் காலத்தினுள் தமிழ் / தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | | √ | | | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| | **இடைநிலைப் பிரிவு (6 முதல் 11 ஆம் தரம் வரை)** | | | | | | | |
| 06. | ஆங்கிலம் | மொத்த கற்கைக் காலத்தினுள் ஆங்கிலம் / ஆங்கில இலக்கியம் / ஆங்கில மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது அல்லது விசேட பட்டம். | | | √ | | | √ |
| 07. | வரலாறு | மொத்த கற்கைக் காலத்தினுள் வரலாறு /தொல்லியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 08. | பௌத்தம் | பௌத்தம் / பௌத்த நாகரிகம் / பௌத்த கலாச்சாரம் பற்றிய கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | | | √ | | |
| 09. | இந்து மதம் | இந்து நாகரிகம் /இந்து மதம் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | | √ | | | √ | |
| 10. | இஸ்லாம் | இஸ்லாமிய தத்துவம் / இஸ்லாமிய நாகரிகம் / இஸ்லாமிய மதம் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | | √ | | | √ | |
| 11. | கத்தோலிக்க திருமறை | இறையியல் / கிறிஸ்தவ நாகரிகம் / கிறிஸ்தவ கலாச்சாரம் பற்றிய கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | | | | |
| 12. | கிறிஸ்தவம் | கிறிஸ்தவ தர்மம் / கிறிஸ்தவ நாகரிகம் / கிறிஸ்தவ கலாச்சாரம் பற்றிய கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | | | | | |
| 13. | புவியியல் | மொத்த கற்கைக் காலத்தினுள் புவியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | √ | √ | √ | √ |
| 14. | குடியியற் கல்வி | சமூகவியல் / அரசியல் அறிவியல் / புவியியல் / வெகுசன தொடர்பாடல் / தொடர்பாடலும் ஊடக கற்கையும் / வரலாறு/ பொருளியல் அல்லது இந்த பாட சேர்க்கைகள் உள்ளடக்கிய ஏதேனும் ஒரு கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 15. | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் ஒரு பாடமாக கொண்ட முகாமைத்துவமானி / கணக்கியல் இளமாணி / வணிகமாணி / விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | √ | √ | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 16 | ஹிந்தி மொழி | குறிப்பிட்ட பாடம் ஒரு பிரதான பாடமாக கொண்டு பெற்றுக் கொண்ட பிறமொழி தொடர்பான பட்டம் அல்லது குறிப்பிட்ட மொழி தொடர்பான விசேட பட்டம் ஒன்றை பெற்றிருத்தல். | | | | √ | | |
| 17 | ஜப்பான் | | √ | | | √ | | |
| 18 | அரபு | | | √ | | | √ | |
| 19 | ஜேர்மன் | | | | | √ | | |
| 20 | கொரியன் | | √ | | | √ | | |
| 21 | இரண்டாம் மொழி (சிங்களம்) | சிங்கள மொழி மூலம் பெற்ற கலைமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சிங்கள பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | | √ | | | √ | |
| 22 | இரண்டாம் மொழி (தமிழ்) | தமிழ் மொழி மூலம் பெற்ற கலைமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தமிழ் பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | √ | | | √ | | |
| 23 | சங்கீதம் (கீழைத்தேயம்) | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய இசையை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலைகள் / அரங்கியல் தொடர்பான கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய இசையை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சங்கீத (கீழைத்தேயம்) பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 24 | சங்கீதம் (மேலைத்தேயம்) | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் மேலைத்தேய இசையை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலைகள்/ அரங்கியல் தொடர்பான கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் மேலைத்தேய இசையை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சங்கீத (மேலைத்தேயம்) பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | | | | | |
| 25 | சங்கீதம் (கர்நாடகம்) | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் கர்நாடக இசையை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட அரங்கியல் தொடர்பான கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் கர்நாடக இசையை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சங்கீத (கர்நாடகம்) பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | | √ | | | | |
| 26 | சித்திரம் | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலைமாணி / அரங்கியற் கலைமாணி / கட்புல கலைமாணி பொது பட்டம் அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரப் பாடத்தை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 27 | நாட்டியம் (தேசிய) | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய நடனத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலை/அரங்கியற் கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) மொத்தகற்கைக்காலத்தினுள் கீழைத்தேய நடனத்தை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேடபட்டத்துடன் க.பொ.த.(உ./த.)பரீட்சையில் கீழைத்தேய நடனப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 28 | நாட்டியம் (பரதம்) | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் பரதநாட்டியம் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலை /அரங்கியற் கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் பரதநாட்டியத்தை உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பரதநாட்டியப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | | √ | | | | |
| 29 | தகவல் தொடர்பாடலும் தொழினுட் பவியலும் | மொத்த கற்கைக் காலத்தினுள் தகவல் தொழினுட்பம் / கணினி விஞ்ஞானப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி / முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பமானி / கலைமாணி/ தகவல் தொழில்நுட்பமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 30 | விவசாயமும் உணவுத் தொழினுட் பவியலும் | விவசாயவியல்தொடர்பான விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம் அல்லது விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பவியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 31 | மனைப் பொருளியல் | ஏதேனும் ஒரு பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த (உ./த.) பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | | |
| 32 | சுகாதாரமும் உடற்கல்வியும் | (I) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் /உடற்கல்வி தொடர்பான பொது பட்டம் அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) விளையாட்டு மற்றும் மனமகிழ் முகாமைத்துவம் தொடர்பான கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | √ | √ | √ | √ | √ |
| 33 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | வெகுஜன தொடர்பாடல் / தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பிரதான படமாக கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | √ | | | √ | | |
| | **மூன்றாம் நிலைப் பிரிவு (தரம் 12 - 13)** | | | | | | | |
| 34 | இரசாயனவியல் | (I) நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் விசேட பாடமாக அல்லது ஏனைய பிரதான பாடமொன்றாக இரசாயனவியல் பாடத்தை படித்திருக்கும் விஞ்ஞானமாணி / பிரயோக விஞ்ஞானமாணி பட்டம்.<br>அல்லது<br>(II) மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்த பாடத்தொகுதியில் 1/3 பகுதியாக இரசாயனவியல் பாடத்தை படித்திருக்கும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம். | √ | | | √ | | |
| 35 | பௌதிகவியல் | (I) நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் விசேட பாடமாக அல்லது ஏனைய பிரதான பாடமொன்றாக பௌதிகவியல் பாடத்தை படித்திருக்கும் விஞ்ஞானமாணி / பிரயோக விஞ்ஞானமாணி பட்டம்.<br>அல்லது | √ | √ | | √ | | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 35 | பௌதிகவியல் | (II) மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்த பாடத்தொகுதியில் 1/3 பகுதியாக பௌதிகவியல் பாடத்தை படித்திருக்கும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம். | √ | √ | | √ | | |
| 36 | உயிரியல் | (I) நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் விசேட பாடமாக தாவரவியல் / தாவர உயிரியல் /விலங்கியல் பாடத்தை படித்திருக்கும் மற்றும் தாவரவியல் / தாவர உயிரியல் விசேட பாடமாக இருக்கும் பொழுது ஏனைய பிரதான பாடமாக விலங்கியல் பாடத்தையும் , விலங்கியல் விசேட பாடமாக இருக்கும் பொழுது ஏனைய பிரதான பாடமாக தாவரவியல்/ தாவர உயிரியல் பாடத்தையும் க.பொ.த உயர் தர பாட திட்டத்திற்கமைவாக படித்திருக்கும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம்<br>அல்லது<br>(II) மூன்று வருட பொதுப் பட்டப் பாடநெறியொன்றில் தாவரவியல்/தாவர உயிரியல் பாடமும் விலங்கியல் பாடமும் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியை மொத்த பாடத்தொகுதியில் ஆக்க குறைந்தது 1/3 பகுதி பூர்த்திசெய்யுமாறு க.பொ.த. (உயர் தர) பாட திட்டத்திற்கமைவாக படித்திருக்கும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம். | √ | | | √ | | |
| 37 | விவசாயம் | (I) விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம் (B.Sc. Agricultural Technology and Management) /விவசாய விஞ்ஞானமாணி பட்டம் (B.Sc. Agriculture) /விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி பட்டம் (B.Sc. Agricultural Resources Management and Technology) / விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (B.Sc. Agri Business Management) / ஏற்றுமதி விவசாய விஞ்ஞானமாணி பட்டம் (B.Sc. Export Agriculture)<br>அல்லது<br>(II) க.பொ.த. (உயர் தர) விவசாய பாட திட்டத்திற்கமைவாக மொத்த பாடத்தொகுதியில் 1/3 பகுதி பூர்த்தி செய்யும் வகையில் படித்திருக்கும் ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணி பட்டம். | √ | | | √ | | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 38 | இணைந்த கணிதம் | (I) நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் விசேட பாடமாக உயர் கணித பாடத்தை படித்திருத்தல் அல்லது பிரயோக கணிதம் விசேட பாடமாக இருக்கும் பொழுது ஏனைய பிரதான பாடமாக தூய கணிதப் பாடத்தையும், தூய கணிதம் விசேட பாடமாக இருக்கும் பொழுது ஏனைய பிரதான பாடமாக பிரயோக கணிதப் பாடத்தையும் படித்திருக்கும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம்.<br><br>அல்லது<br><br>(II) மூன்று வருட பொதுப் பட்டப் பாடநெறியொன்றில் பிரயோக மற்றும் தூய கணிதப் பாடங்கள் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதி மொத்த பாடத்தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதியாக காணப்படும் விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமாணி பட்டம்.' | √ | √ | | √ | √ | |
| 39 | பொறியியல் தொழினுட் பவியல் | பட்டத்தில் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதி நிர்மாணம், எந்திரவியல் மின் மற்றும்/அல்லது இலத்திரனியல் போன்ற பாடத் துறைகளை உள்ளடக்கியதாக பெற்றுக் கொண்ட பொறியியல்/ தொழில்நுட்பமாணி /பொறியியல் தொழில்நுட்பமாணி பட்டம். | √ | | | √ | √ | |
| 40 | தகவல் தொடர்பாடலும் தொழினுட் பவியலும் | (I) நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் தகவல் தொழினுட்பம் / கணினி விஞ்ஞானம் விசேட பாடமாக அல்லது ஏனைய பிரதான பாடமொன்றாக கொண்டிருக்கும் பட்டம்.<br><br>அல்லது<br><br>(II) மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்த பாடத்தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதியை பூர்த்திசெய்யுமாறு தகவல் தொழினுட்பம் / கணினி விஞ்ஞானம் பிரதான பாடமொன்றாக கொண்டிருக்கும் பட்டம்.' | √ | | | √ | √ | |
| 41 | கணக்கீடு | மொத்த கற்கைக் காலத்தினுள் கணக்கீடு பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிகமாணி /வணிக நிர்வாகமாணி /வணிக முகாமைத்துவமாணி / விஞ்ஞானமாணி / கணக்கியல் இளமாணி விசேட பட்டம். | √ | √ | | √ | √ | √ |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 42 | வணிகக் கல்வி | வணிகக் கல்வி /கணக்கியல் /வணிகவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடக்கப்பட்ட வணிகமாணி / கலைமாணி/ வணிக நிர்வாகமாணி / விஞ்ஞானமாணி / வணிக முகாமைத்துவமாணி விசேட பட்டம். | √ | √ | √ | √ | | |
| 43 | தர்க்கவியல் | தர்க்கவியல் / தத்துவம் ஒரு பிரதான பாடமாக கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி விசேட பட்டம். | √ | | | √ | | |
| 44 | பொருளியல் | பொருளியல் விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 45 | புவியியல் | புவியியல் விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 46 | அரசியல் அறிவியல் | அரசியல் அறிவியல் விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 47 | மனைப் பொருளியல் | ஏதேனும் ஒரு பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 48 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | வெகுஜன தொடர்பாடல் / தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பிரதான படமாக கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி விசேட பட்டம். | √ | | | √ | | |
| 49 | பௌத்த நாகரிகம் | பௌத்தம் /பௌத்த நாகரிகம் /பௌத்த கலாச்சாரம் தொடர்பான கலைமாணி விசேட பட்டம். | √ | | | √ | | |
| 50 | சித்திரக் கலை | (I) மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட நுண்கலைமாணி / அரங்கியற் கலைமாணி / கட்புல கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>(II) மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரப் பாடத்தை உள்ளடக்கிய கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். ’ | √ | √ | | √ | √ | |

| | | | புத்தளம் மாவட்டம் | | | குருநாகல் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | பாடம் | கல்வி தகைமை | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 51 | சிங்களம் | மொத்த கற்கைக் காலத்தினுள் சிங்களம் / சிங்கள மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் விசேட பட்டம். | √ | | | √ | | |
| 52 | தமிழ் | மொத்த கற்கைக் காலத்தினுள் தமிழ் / தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் விசேட பட்டம். | | √ | | | √ | |
| 53 | ஹிந்தி | ஹிந்தி மொழி தொடர்பான விசேட பட்டம். | | √ | | | | |
| 54 | மாணவர் ஆலோசனை | மொத்த கற்கைக் காலத்தினுள் ஆலோசனை அல்லது உளவியல் பிரதான படமாக கொண்டு பெற்றுக் கொண்ட பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | | √ | √ | |
| 55 | நூலகம் | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் தொடர்பான பட்டம். | √ | √ | | √ | √ | |

06-212